மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.05.2025) அமெரிக்கா, லாஸ் ஏஞ்சலஸ் கலிபோர்னியாவில் நடைபெறவுள்ள "மனநல மருத்துவ சர்வதேச மாநாட்டில்" தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்துகொள்ள வந்துள்ளமைக்கு "தென் விரிகுடா தமிழ்ச்சங்கம்" சார்பில் வரவேற்பும் விருந்தளிப்பும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அரசுப் பள்ளியில்

ஒருங்குறிக் குறியீடு மூலமாக மாணவர் சேர்க்கை:

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாராட்டு!

சென்னை, மே.20-

மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் கல்வித் துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு அரசு, அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் காஞ்சிபுரம் ஒன்றியம் திருப்புட்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் க்யூஆர் கோடு மூலமாக மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும்பொருட்டு நவீன முறையில் இந்த க்யூஆர் கோடு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இதுதொடர்பாக பள்ளியின் சார்பில் வைக்கப்பட்டுள்ள பேனரில்,

"மாணவர் சேர்க்கை விண்ணப்பம்

வீட்டில் இருந்தே உங்கள் குழந்தைகளை நம்ம திருப்புட்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சேர்த்திடுங்க..

அதற்கு க்யூ ஆர் கோடு ஸ்கேன் பண்ணுங்க; நம்ம ஸ்கூல்ல சேருங்க" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தனது எக்ஸ் பக்கத்தில் இந்த பேனரைப் பகிர்ந்து 'சூப்பர்' எனப் பாராட்டியுள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை இந்திய அளவில்

முதன்மை மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, மே 20 -

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து அய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது சுற்றுலா பயணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனுபவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள்ளிட்ட புதிய அனுபவங்களை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். இவ்வகை சுற்றுலாக்கள் தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலா தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் உலக தரத்திலான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், தமிழ்நாடு சுற்றுலாத் துறை இந்திய அளவில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பான முறையில் விரைவாக மேற்கொள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ச.கவிதா, சுற்றுலா ஆணையரக உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று -

சோழிங்கநல்லூர் தொகுதியில் 4 புதிய விடியல் பேருந்துகள்!

எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் !

சென்னை, மே 20 -

சென்னை தெற்கு மாவட்டம் - சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் ஒட்டியம்பாக்கத்தில் 4 புதிய விடியல் பேருந்துகளை பொதுமக்களின் கோரிக்கையின்படி, சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் நேற்று தொடங்கி வைத்தார்.

சோழிங்கநல்லூர் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் ஒட்டியம்பாக்கம் ஊராட்சியை உட்டிய ஊராட்சிகளின் பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

அக்கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் நேற்று (19.5.2025 - திங்கள்கிழமை) ஒட்டியம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தடம் எண் 51C, சைதாப்பேட்டை, வேளச்சேரி வரை, வேளச்சேரி முதல் புதுப்பாக்கம் வண்டலூர் வரை என 4 விடியல் பயணப் பேருந்துகள் (வழி) கன்னிகாபுரம் வேளச்சேரி ரயில் நிலையம், நாராயணா புரம், ஒட்டியம்பாக்கம் ரோடு, சித்தாலப்பாக்கம், அரசன்கழனி , காரணை, புதுப்பாக்கம், புதுப்பாக்கம் கல்லூரி, வண்டலூர் கூட்ரோடு ஆகிய வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளை சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், மாநகர போக்குவரத்துக் கழக அதிகாரிகள், ஊழியர்கள், பொதுமக்கன் என பெருமளவில் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி திமுக சார்பில் நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, தலைமை கழகப் பேச்சாளர் சிவ. அருணகிரி, இளம் பேச்சாளர் சை. இம்ரான், கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், தொகுதி பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.இந்நிகழ்வில் மாநில, மாவட்ட,பகுதி,வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் து.விக்டர் தலைமையில் நடைபெற்றது. இதில் 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா,எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் நா.எழிலன், எம்.கே.மோகன், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, தொகுதி பார்வையாளர்கள் வே.கௌதமன், சி.எச்.சேகர், பகுதி கழக செயலாளர்கள் ந.ராமலிங்கம், ஏஆர்பி.எம்.காமராஜ், மா.பா.அன்புதுரை, ச.பரமசிவம், எஸ்.மதன்மோகன், வினோத் வேலாயுதம், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன!

அமைச்சர் த.மனோதங்கராஜ் தகவல்!

சென்னை, மே 20 -

கர்ப்பிணி தாய்மார்களுக்கான அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது வளர்மிகு வட்டார திட்டத்தின் கீழ் பிரச வத்திற்கு பின் கவனிப்பு பிரிவுகளை துவக்கி வைத்து பேசுகையில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் பூதப்பாண்டி அரசு மருத்துவமனையில் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர். அழகுமீனா, தலைமையில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேற்று (19.05.2025) துவக்கி வைத்து தெரிவிக்கையில் முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் மிகவும் பின் தங்கியுள்ள தொகுதிகளில், அரசின் நிதியுதவியுடன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும், குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு வளமிக்க வட்டார வளர்ச்சி திட்டம் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் தோவாளை வட்டம் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு துறைகளின் சார்பில் வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சுகாதாரத்துறையில் பூதப்பாண்டி அரசு மருத்துவமனையில் இயங்கிவரும் தாய் சேய் நல மையத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு அளிக்கப்படும் வசதிகளையும் சிகிச்சை முறை களையும் மேம்படுத்த திட்ட அனுமதி பெறப்பட்டு, மாவட்ட திட்ட குழுவால் நிர்ணயிக்கப்பட்ட சுகாதார குறியீட்டு இலக்குகளை எட்டுவதை குறிக்கோளாக கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் சுகாதார துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குளிர் சாதன வசதி!

அதன்ஒருபகுதியாக பூதப்பாண்டி அரசு மருத்துவமனை தாய் சேய் நல பிரிவில் பிரசவ முன் கவனிப்பு அறையில் கர்ப்பிணி பெண்கள் அமரும் பகுதியில் குளிர் சாதன வசதி, பிரசவ அறையில் குளிர்சாதன வசதி, பிரசவ பின் கவனிப்பு பகுதியில் தாயின் உடனிருப்போருக்கு படுக்கை வசதி, ஒவ்வொரு படுக்கைக்கும் நடுவே திரைசீலை மறைப்பு வசதி, அறுவை அரங்கத்திற்கு தேவையான ஒளிர்விளக்கு, ரத்த பரிசோதனை நிலையத்திற்கு இன்குபேட்டர், பிரசவ பின் கவனிப்பு அறையில் கட்டில்கள், சாய்தள வசதி, பிறந்தகுழந்தைக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை நோயை குணப்படுத்த போட்டோதெரபி கருவி, பிரசவ அறையில் கர்ப்பிணி பெண்களுக்கான சுகாதர செய்திகளை தெரியப்படுத்த ஸ்மார்ட் டிவி வசதி, குடிநீர் சுத்திகரிப்பான், படுக்கை விரிப்புக்களை தினமும் மாற்றும் வகையில் மூன்று நிறங்களில் படுக்கை விரிப்புக்கள், குழந்தைகள் பகுதியில் விளையாட்டு பொருட்கள், தாய் சேய் நல கட்டிடத்தில் ஒளிரும் பெயர் பலகை ஆகிய வசதிகள் ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பான மகப்பேறு என்பது ஒரு நாட்டின் மிகமுக்கியமான வளர்ச்சி குறியீடாகும். ஆரோக்கியமான வளரிளம் பருவ உணவுமுறைகள், உடற்பயிற்சி, கர்ப்பிணி தாய்மார்களுக்கு சரிவிகித உணவு, மனநலம், கர்ப்பகாலத்தில் எளிதான சில உடற்பயிற்சிகள் ஆகியவை சுகப்பிரசவத்திற்கு வழிவகுக்கும். தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலான பிரசவங்கள் தனியார் மருத்துவமனைகளில் நடைபெற்று வருகின்றது. இதனை மாற்றி பொதுமக்களின் எதிர்பார்ப்பிற்கு இணையாக அரசு மருத்துவமனைகளில் வசதிகளை மேம்படுத்துவதோடு, மருத்துவர்கள், செவிலியர்களின் கனிவான சேவையையும் உறுதி செய்யும்போது மகப்பேற்றிக்காக பொதுமக்கள் தாங்களாகவே அரசு மருத்துவமனையை நாடி விரும்பி வருவார்கள். அதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இங்கு செயல்படுத்தப்பட்டுள்ள வசதிகள் அரசு தலைமை மருத்துவமனை பத்மநாபபுரம், அரசு மருத்துவமனை குழித்துறை ஆகியவற்றிலும் முதல் கட்டமாக செயல்படுத்தப்படும் .

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலையாய நோக்கமே கர்ப்பகால மரணமே இல்லாத மாநிலத்தை உருவாக்குவது தான். இந்த இலக்கை அடிப்படையாக கொண்டு நமது மாவட்டத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு கர்ப்பகால உடல் பரிசோதனை, இரத்த பரிசோதனை, ஸ்கேன் பரிசோதனை ஆகியவற்றை பொதுசுகாதார துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலவாழ்வு துறை, மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிவை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றன. கிராம சுகாதார செவிலியர்கள் கர்பிணிப் பெண்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று கர்பிணிப் பெண்கள் தொடர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளார்களா என கண்காணித்து வருகின்றனர். இதுதவிர பிரசவ வசதி உள்ள அனைத்து தனியார் மருத்துவமனைகளுக்கும் மாதந்தோறும் ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கர்ப்பகால சிகிச்சையின்போது கடைபிடிக்கவேண்டிய வழிகாட்டு சிகிச்சை நெறிமுறைகள் மூத்த அனுபவம் வாய்ந்த மகப்பேறு நிபுணர்களால் விளக்கப்படுகின்றது.

ஆரோக்கியமான மகப்பேற்றிற்கு கர்ப்பிணி பெண்களுக்கு தேவைப்படும் அனைத்து சேவைகளையும் ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் சுய பரிசோதனை மேற்கொண்டு மாற்றங்களை செய்து பொதுமக்கள் அரசு மருத்துவமனையின் சேவையை நாடி வரும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் அரசு மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை மேற்கொண்டு, அரசின் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், இணை இயக்குநர் மருத்துவம் மரு.சகாய ஸ்டீபன்ராஜ், பூதப்பாண்டி அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவர் மற்றும் துணை இயக்குநர் குடும்பநலம் மரு.ரவிக்குமார், தோவாளை வட்டார மருத்துவ அலுவலர் மரு.ராஜகுமார், மாவட்ட தாய்சேய் நல அலுவலர் மரு.பியூலா, செயற்பொறியாளர் (கட்டிடம் மற்றும் மருத்துவம்) முருகேசன், வளமிகு வட்டார வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் மரு.அனுஷியா, கேட்சன், பூதலிங்கம், பிராங்கிளின், துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

சோழிங்கநல்லூர் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் ஒட்டியம்பாக்கத்தில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சைதாப்பேட்டை, வேளச்சேரி , புதுப்பாக்கம், வண்டலூர் வரை என 4 விடியல் பயணப் பேருந்துகள் நாராயணாபுரம், சித்தாலப்பாக்கம், அரசன்கழனி , காரணை, புதுப்பாக்கம், புதுப்பாக்கம் கல்லூரி, வண்டலூர் கூட்ரோடு ஆகிய வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளை எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.